# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

## மானியக் கோரிக்கை எண். 36

## அறிவிப்புகள்
## 2019–2020

ஓ. பன்னீர்செல்வம்
துணை முதலமைச்சர்

## 1. நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாவட்ட வாரியான பிரிவு அமைத்தல்.

## (Setting up of District Level Sustainable Development Goals (SDG) Cell)

மாவட்ட வாரியாகவும், வட்டார வாரியாகவும் நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளின் செயற்திட்டங்கள் சென்றடைந்த தொலைவினைக் கண்டறியவும், தொடர்ந்து கண்காணிக்கவும் **இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** மாவட்ட வாரியான பிரிவுகள் உருவாக்கப்படும்.




## 2. நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளுக்கான துறை வாரியான சிறப்புப் பிரிவு அமைத்தல்.

## (Formation of Sustainable Development Goals (SDG) Units in Departments)

நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை மாநில அளவில் முழுமையாக அடைந்திட துறை ரீதியான கூட்டு முயற்சியும் ஒத்துழைப்பும் இன்றியமையாதவை.

எனவே முன்னேற்றத்தினை கண்டறியவும் தொடர்ந்து கண்காணிக்கவும் ஒவ்வொரு துறையிலும், சிறப்பு பிரிவு ஒன்றை உருவாக்குவது இன்றியமையாததாகும்.

ஆகவே, துறை வாரியான நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தைக் கண்டறியவும், தொடர்ந்து கண்காணிக்கவும் **இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** சிறப்பு பிரிவுகள் உருவாக்கப்படும். .




## 3. மாநிலத்தின் பின்தங்கிய வட்டாரங்கள், ஏனைய வட்டாரங்கள் மற்றும் மாவட்டங்களின் வளர்ச்சியை தரவரிசைப்படுத்துதலும், விருது வழங்குதலும்.

## (Award and Ranking the Performance of Backward Blocks, Other Blocks and Districts in the State)

மாவட்டம் மற்றும் வட்டாரங்களின் வளர்ச்சிக்கான காரணிகளை, நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளின் இணையதள கண்காணிப்பு பலகையின் செயல்பாட்டுடன் இணைப்பதன் வாயிலாக, அவற்றின் செயல்பாட்டின் அடிப்படையில் மாதந்தோறும் தரவரிசைப்படுத்தவும் கண்காணிக்கவும் இயலும்.

மாநிலத்தின் பின்தங்கிய வட்டாரங்கள், ஏனைய வட்டாரங்கள் மற்றும் மாவட்டங்களின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் வகையில், மாதந்தோறும் தரவரிசைப்படுத்தி அதனடிப்படையில் சிறப்பாக

செயல்படுவனவற்றைக் கண்டறிந்து, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஆண்டுதோறும் விருது வழங்கப்படும்.

ஓ. பன்னீர்செல்வம்
துணை முதலமைச்சர்